Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

# Feminism in the Novel *Aalankaal*

**D. Sheeja**, Reg No: 241130601015, Research Scholar, Tamil Research Centre, Lekshmipuram College of Arts & Science, Kanniyakumari, Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0005-4459-903X**
**Dr. S. Elamaran**, Assistant Professor, Tamil Research Centre, Lekshmipuram College of Arts & Science, Kanniyakumari, Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-7559-5980**
**DOI: 10.5281/zenodo.14752925**

## Abstract

*Feminism is not only about gaining rights for women but also about trying to change society. Feminists should understand all the problems of women and try to solve them. Feminism is about promoting the advancement and equality of women. In the Tamil novel by "Aalangaal" how women run the family, cheat others, the living conditions of the poor, the flow of life, feminism, female slavery, women's kindness and dowry violence are made as themes by the writer. Feminism also speaks against the atrocities committed against women. The novel has such incidents related to the victimization of women. Since the dawn of human society, women have been subjected to many hardships. The very birth of a woman is seen as a symbol of bearing burdens. From birth to death, women experience many hardships in life. Women who do not change this situation face many problems. They face problems such as lack of freedom, being subjected to violence and even slavery. This article examines the message of Mughilai Rajapandian's novel about the ethics of family life and issues related to feminism.*

**Keywords:** Feminism, Women, Family, *Aalangal*, Mughilai Rajapandian.

## References

[1] Aranganathan, The. *Tamil Ilakkiya Varalaru Oru Puthuparvai*. Devan Pathippkam, 43 Thirunagar, Thiruvanaikovil, Trichy-620005, 1999.
[2] Rajapandian, Mughilai. *Aalankal*. Kowvan Pathippkam, Chennai-600061, 2009.
[3] Gauri Anuradha, K. *Ramanan Padaippukalil Makalir Nilai*. Kodambakkam, Chennai-600024, 2012.
[4] Subbiah, Arang. *Ilakkiyaththiranayvu Isangal*. Kolkaikal. Pavai Publications, Chennai-14, 2006.
[5] Mallika, Arang, Munaivar. *Tamil Ilakkiyamum Penniyamum.* Pavai Printers, Chennai-14, 2015.
[6] Rengammal, Ira, Munaivar. Vasuki, Su. Munaivar. *Penniyam Anugumuraikalum Ilakkiyapayanpaadum*. Pavai Printers, Chennai-600014, 2016.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

# ஆலங்கால் நாவலில் பெண்ணியப் பார்வை

**து. ஷீஜா,** பதிவு எண்: 241130601015, தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கன்னியாகுமரி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0005-4459-903X
**முனைவர் சு. இளமாறன்,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வுமையம், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கன்னியாகுமரி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-7559-5980
DOI: 10.5281/zenodo.14752925

**ஆய்வுச்சுருக்கம்**

*பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும். பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்துக் கொண்டு அவற்றைக்களைய பெண்ணியம் முற்பட வேண்டும். பெண்களின் முன்னேற்றத்தையும் சமத்துவத்தையும் வலியுறுத்துவதாக அமைவதே பெண்ணியமாகும். ஆலங்கால் நாவலில்; பெண்கள் குடும்பத்தை நடத்தும் விதங்கள், பிறரை ஏமாற்றுதல், ஏழைகளின் வாழ்வு நிலை, வாழ்க்கையின் ஓட்டம், பெண்ணியப்பார்வை, பெண்ணடிமைத்தனம், பெண்ணின் இரக்கம், வரதட்சணை கொடுமை ஆகியவை இடம்பெறுகின்றன. குடும்பத்தின் வாழ்வியல் நெறிமுறைகளையும் பெண்ணியம் சார்ந்த பிரச்சனைகளையும் முகிலை இராசபாண்டியன் புனைவு கதையாக கூறியுள்ள செய்தியை இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.*

**குறிப்புச்சொற்கள்:** பெண்ணியம், பெண்கள், குடும்பம், ஆலங்கால், முகிலை ராஜபாண்டியன்.

**முன்னுரை**

பெண்ணியம் என்பது பெண்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் கொடுமைகளை எதிர்த்து குரல் கொடுப்பதாகும். மனித சமுதாயம் தோன்றிய காலந்தொட்டே பெண் என்பவள் பல இன்னல்களுக்கு ஆளாகின்றாள். பெண் என்னும் பிறப்பே சுமைகளைத் தாங்கும் அடையாளமாகவே பார்க்கப்படுகிறது. பிறப்பு முதல் இறப்பு வரை பெண்கள் பல இன்னல்களை அனுபவிப்பவர்களாகவே உள்ளனர். இந்நிலை மாறாதபெண்கள் பல பிரச்சனைகளைச் சந்திக்கின்றனர். சுதந்திரமின்மை, வன்கொடுமைகளுக்கு உட்படுத்துவதால் அடிமைத்தனம் ஆகிய நிலைகளில் பிரச்சனைகளை எதிர் கொள்கின்றனர். ஆலங்கால் நாவல் கூறும் மக்களின் வாழ்வியல் நெறிமுறைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பெண்ணியம் விளக்கம்**

பெண்ணியம் என்பது ஒவ்வொரு காலத்திலும் பெண்களின் முன்னேற்றத்தையும் சமத்துவத்தையும் வலியுறுத்துவதாகும். 'Feminism' என்ற ஆங்கிலச்சொல் 'Femina' என்ற

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

இலத்தீன் சொல்லிலிருந்து தோன்றியதாகும். 'Feminism' என்ற இலத்தின் சொல்லுக்குப் பெண்ணின் குணாதிசயங்களைக் கொண்டுள்ளது.'Feminism' என்ற சொல் 1894 ஆம் ஆண்டில் வெளிவந்த ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியில் முதன் முதலாக இச்சொல் எடுத்தாளப்பட்டுள்ளது. ஆக்ஸ்போர்டு அகராதி பெமினிசம் என்ற சொல் பெண்களின் தேவையை நிறைவேற்ற அவர்கள் சார்பாக வாதாடுவது, போராடுவது என்ற பொருளைத் தந்துள்ளது. 'Delux' ஆங்கிலத் தமிழ்ப் பேரகராதி பெமினிசம் என்பதற்குப் பெண்களின் உரிமையை வற்புறுத்தும் ஒரு இயக்கம் என்று விளக்கம் தந்துள்ளது. பாலினப் பாகுபாடு (Sex Discrimination) தொடர்பான சமூகப் பண்பாடு வேர்களை இனம் கண்டுகொள்ளவும் குறிப்பாக, பெண்களுக்கு எதிரான அடக்குமுறை, சுரண்டல் முறைகளை உணர்ந்து கொள்ளவும், பெண்ணியம் தெளிவான வரையறையை முன்வைக்கிறது. இது பெண்களுக்கு எதிராக குடும்ப சமூக நிறுவனங்களில் அரசியலாகி வரும், ஆண் அதிகாரத்தை (Power) ஆளுகையை (Domination) எதிர்த்துச் செயல்படும் உணர்வு நிலையைச் சுட்டியும் நிற்கிறது. சமூகத்திலும், வேலைத்தளத்திலும், குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுண்டல் பற்றிய பெண்களின் உணர்வு நிலையைச் சுட்டியும் நிற்கிறது. சமூகத்திலும், குடும்பத்திலும், வேலைதளத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்களின் உணர்வு நிலைகளும் இந்நிலையை மாற்றுவதற்குப் பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வு பூர்வமான நடவடிக்கைகளும் பெண்ணியத்தின் பரந்துபட்ட வறையரையாக இப்போதைய நிலையில் கொள்ளலாம்.

**பெண்ணியம் - அறிஞர்கள் கருத்து**

பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதனை மாற்ற மெற்கொள்ளப்படும் வழிமுறைகள் பெண்ணியம் என்கிறார் கார்டன். "பெண்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து ஓர் ஆற்றலை உருவாக்கி பெண்மை அதன் தன்மையில் ஆண்களோடு மாறுபட்டிருப்பின் அது ஆண்மைக்கு நிகரானது என்பதை ஏற்றுக் கொள்ள வைப்பது என்பது ஜெயின் என்பவரின் கருத்தாகும்". பெண்ணியம் என்பது பெண்கள் பாலினப்பாகுபாட்டால் அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதாரத் துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கம் என்கிறார். புட்சர் சமூகத்திலும் வேலைத்தளத்திலும் குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்களின் உணர்வு நிலைகளும் இந்நிலையை மாற்றுவதற்குப் பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வுப்பூர்வமான நடவடிக்கைகளும் பெண்ணியத்தின் பரந்துபட்ட வரையறையாக இப்போதைய நிலையில் கொள்ளலாம்" என்கிறார் மொலினாதேன்மொழி.

ஆலங்கால் நாவலில் ஒரு கலைஞன் பெறும் பல்வேறு வாழ்வியல் அனுபவங்களே அவனது படைப்பிற்கு ஆதாரமாக அமைகின்றன. மனிதன் செம்மையாக வாழ்வதற்குத் தேவையான வழிமுறைகளை சமுதாயம் அவ்வப்போது உருவாக்கி தருகிறது. சமூக

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

நிறுவனங்களுக்கு அடிப்படையாக விளங்குவது குடும்பமாகும். படைப்பாளி தன் அனுபவங்களிலிருந்தும், சமூதாய சூழல்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளும் வாழ்க்கை அனுபவங்களைப் படைப்புகளில் வெளிப்படுத்துகிறான். இவ்வியலில் ஆலங்கால் நாவலில் காணப்படும் வறுமை, மதுப்பழக்கம், திருமணம், குடும்பச் சூழ்நிலை, முதியோரின் நிலை, மனிதநேயம், தொழிலாளர்களின் நிலைகள் ஆகியவை குறித்த பதிவுகள் ஆராயப்பட்டுள்ளன.

**ஆலங்கால் நாவலில் சமுதாய நிலை**

ஆலங்கால் நாவலானது சமுதாயக் கண்ணோட்டத்தில் படைக்கப்பட்டுள்ளது. நாவலாசிரியர் சமுதாயத்தில் மக்கள் அன்றாடம் சந்திக்கின்ற பிரச்சனைகள், தொழிலாளர்கள் நிலைகள், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடுகள், அரசியல் ஆட்டங்கள், உணவுப்பற்றாக் குறையினால் ஏழை மக்கள் படும் துன்பங்கள், சமூதாயத்தில் பெண்கள் அன்றாடம் சந்திக்கும் பிரச்சனைகள் என சமூகத்தை அப்படியே பிரதிபலித்துள்ளார். அவ்வகையில் ஆலங்கால் நாவலில் மக்கள் தேவைக்குப் பயன்பெறும் பனையேறும் தொழிலை தர்மலிங்கம் செய்து வாழ்ந்தார். ஒரு நாள் தர்மலிங்கம் பனையேறிவிட்டு வீட்டிற்கு வந்து மனைவி ரெங்கம்மாள் “இன்னா…. வந்திட்டேன்…” ( முகிலை இராசபாண்டியன், ப. 11) என்று சொல்லிக் கொண்டே ஓடி வந்தாள் கணவனின் தொழிலில் தன்னையும் இணைத்துக் கொண்டு குடும்பத்திற்காக உழைக்கும் பெண்ணாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

**குடும்பம்**

மனிதன் வாழ்வுக்கு அடிப்படையாக அமைவது குடும்பம். அது கணவன், மனைவி, பிள்ளைகளைக் கொண்ட சிறிய அளவுடைய ஒன்றாகும். பரந்துப்பட்ட நிலையில் ஒருங்கிணைந்து வாழ்கின்ற நபர்களையும் குறிக்கிறது. “குடும்பம் என்பது சிறிய குழுவாகவும் இருக்கலாம், பலர் அடங்கிய ஒரு பெருங் குழுவாகவும் இருக்கலாம், இதில் குறைந்த அளவு ஓர் ஆணும் ஓர் பெண்ணும் இடம் பெற வேண்டும் இவ்விருவரும் அவர்களுடைய சமுதாயம் ஏற்றுக் கொண்டுள்ள திருமண முறைப்படி மணம் செய்து கொண்டவர்களாக இருக்க வேண்டும். கணவன், மனைவி முதலியோர் சேர்ந்து வாழும் அமைப்பு” ‘குடும்பம’; எனக் கூறப்படுகிறது.

**தொழிலார்களின் அவலம்**

மக்களின் உயிரையும் உடலையும் பாதுகாத்து வாழ்வதற்கு துணை செய்வது தொழில்களாகும். தொழிலாளியின் நிலை மிகவும் தாழ்ந்த நிலையில் காணப்படுகிறது. உழைக்கும் வர்க்கத்தினரின் வாழ்க்கை என்பது சமூகத்தில் சிக்கல் நிறைந்ததாகக் காணப்படுகிறது. நாவலில் முதலாளிகள், தொழிலாளர்களுக்கு இடையேயுள்ள வேறுபாடுகளை ஆலங்கால் கூறுகிறது. இதில் காணலாம். முதலாளிகளுக்கு தொழில்களினால் எண்ணற்ற லாபம் கிடைத்தாலும் ஏழைகளுக்குக் அற்பக் கூலியைக் கொடுக்கவும் தயங்கினர். தொழிலாளிகள் வீட்டில் படும் துன்பங்களும் அதிகம். “நான் எங்ஙன பேசிக்கிட்டு நிக்கேன்

பனை ஏறின ஒடனே வீட்டுக்குத் தான் வருவேன்… வாறதுக்கு முன்னால் ஆலங்கால்ல ஏறங்கி ஒருமுங்கு முங்கிட்டு வருவேன்….” தர்மலிங்கத்தின் அவல நிலை நாவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**மனிதனின் மனநிலை**

மனிதன் மனிதனை மதித்தலும் மனித மதிப்பைப் பேணுதலும் மனித மனநிலை ஆகும். மனிதனை மனிதன் மதிக்க வேண்டுமானால் முதலில் மனிதன் தன்னைப் போன்ற மனிதர்களிடமும் அன்பு செலுத்த வேண்டும். அன்பே இன்பத்தின் ஊற்றாகும் அவ்வின் ஊற்று மனித இனத்தின் படிந்துள்ள மாசுகளை நீக்கும். மனிதனை மனிதனாக வாழ வைக்கும் மனிதனை நேசிப்பது மனித நேயம் எனலாம். திருவள்ளுவர்

**அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு (குறள்-80)**

வாடிய பயிரைக்கண்ட போதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலாரின் சிந்தனையில் மனித நேயம் மிளிர்வதைக் காணமுடிகிறது. உணர்வு சார்ந்த மனித நேயம் என்பது காலம், இடம் என்னும் பின்னணிகளில் மனிதன் எப்படி எப்படி இயங்க வேண்டும் என்பதற்கான வழிமுறைகளைக் குறிக்கிறது. கள்ளு வித்துட்டு தர்மலிங்கம் சொன்னது எதையும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. **“முத்தையா தப்பிப்போன விஷயத்தை மறைப்பதற்கு இன்னொருவரைப் பிடிப்போம் என்ற எண்ணம் அவர்களிடம் இருந்தால் அவர் சொன்ன எதையும் அவர்கள் கேட்கவில்லை” (முகிலை இராசபாண்டியன். ப. 21)** என்ற வரிகள் தெரிவுப்படுத்துக்கின்றன. முதன்மையானது என்பதுமாகிய நடைமுறைகள் ஆணாதிக்க சமுதாயத்தில் நிலவுகிறது என்று ஆணாதிக்கம் பற்றிய செய்தியைப் பதிவு செய்கிறது.

**பிறரை ஏமாற்றுதல்**

பிறரை ஏமாற்றுதல் மனிதனிடம் இயல்பாக இருக்க கூடிய ஒன்றாகும். பல மனிதர்கள் தன்னுடன் பழகும் தோழமைக்கு இடையூறை ஏற்படுத்துவார்கள். சிலர் நல்லது செய்வது போன்று தீமையை உருவாக்குகின்றனர். நாவலில் இடம்பெறும் முத்தையா கள்ளு குடிச்சாருண்ணு போலீஸ்காரர் வேனுக்குள் ஏற்றினார். அவர்களை அழைத்துக்கொண்டு செல்லும்போது **“முத்தையா திடீரென்று குளத்திற்குள் குதித்துவிட்டார். வெளியே நின்ற போலீஸ்காரர் பார்ப்பதற்குள் முங்கு நீச்சலிலேயே குளத்துக்குள் போய் விட்டார். என்ன…ஓய்…இப்படிக் கோட்டை உட்டுட்டு நிக்கிறீரு…” (முகிலை இராசபாண்டியன். ப.22)** என்று கூறுவதிலிருந்து அவன் பிறரை ஏமாற்றுவதையே குறிக்கோளாகவும் தொழிலாகவும் கொண்டிருக்கும் இழிகுணத்தை எடுத்துரைக்கின்றது.

**ஏழைகளின் வாழ்வு நிலை**

சமுதாயத்தில் காணப்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டே ஏழை, பணக்காரன் உயர்ந்தோர், தாழ்ந்தோர், முதலாளி தொழிலாளி எனும் பாகுபாடு

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

உருவாகின்றது. ஒவ்வொரு சமூகச்சூழலும் ஏழைகளை ஒரு சமூகக் கைதியாக நிர்ணயம் செய்கின்றது. இந்நாவலில் தர்மலிங்கம் என்ற பாத்திரத்தின் மூலமாக பல்வேறு பொருளாதார வசதி படைத்தோர் ஏழைகளை நசுக்குவதை ஆசிரியர் காட்டுகின்றார். அத்தடையையும் மீறி தர்மலிங்கம் தன்னுடைய சொந்த முயற்சியின் மூலமாகப் போராடி வாழ்வில் வெற்றியடைகிறான.

**வாழ்க்கையின் ஓட்டம்**

ஒவ்வொரு காலநிலையிலும் வாழ்க்கைப் போராட்டமானது சமூக பணக்காரனை கொண்டே அமைகின்றது. வாழ்க்கைமுறையானது சமூக ஏற்றத்தாழ்வுகளை வைத்தே நிர்ணயம் செய்யப்படுகின்றது. இந்நாவலிலும் தர்மலிங்கம் வாழ்க்கைமுறை, அவனது குடும்பத்தின் வறுமை நிலையை முன்னிலைப்படுத்தியே அமைகின்றது. அவன் போலீஸ்காரன் மூலம் பல இன்னல்களை அடைந்தான் என்றும் எளியவனை அந்தஸ்து மிக்கவர்கள் எவ்வாறு அடிமைப்படுத்தி அவர்களை அடக்க முற்படுகின்றனர் என்பதையும் ஆசிரியர் கூறுகின்றார். கணவனைப் போலீஸ் பிடித்துக் கொண்டு போன கவலையில், தங்கையின் கல்யாண ஏற்பாட்டால் மறந்தது இதைப் போல தான் இன்றைய வாழ்க்கைமுறை உள்ளது. மக்களின் வாழ்க்கையில் ஒன்றினை அடைய வேண்டும் என நினைக்கும் போது வேறு ஒன்று வந்து தடையிட்டு வாழ்க்கையானது ஏதோ ஒன்றை அடையவேண்டும் என்பதற்கான போராட்டமாகவும் இயந்திரத்தனமான ஓட்டமாகவும் அமைகின்றது. தர்மலிங்கம் தன்னுடைய இன்னல்கள் அனைத்தையும் எதிர்த்து சுயமாக தனக்கென சுயமரியாதை ஏற்படுகின்ற வகையில் வேலையினை அடைய எண்ணி கடினமாக உழைக்கிறான். தன்னுடைய முயற்சியால் கிடைத்த வேலையின் நிமித்தமும் வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றியடைகிறான்.

**பெண்ணியப் பார்வை**

அன்றாட வாழ்வில் வீட்டு வேலைகள் அனைத்தையும் பெண்கள் செய்கின்றனர். நம் சமூகத்தில் ஒரு கணிசமான சதவீதம் பெண்கள் சும்மாதான் வீட்டில் இருக்கிறேன் என்று சொல்லி கொண்டிருப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். உண்மையில் இவர்கள் எந்த வேலையும் செய்யாமல் வீட்டில் சும்மா இருக்கவில்லை, வீட்டு வேலைகளையும் செய்து முடிக்கின்றனர். இவர்கள் தங்கள் குடும்பத்தின் எல்லோருக்கும் முன் விழித்தெழுந்து எல்லோருக்கு பின் உறங்கச் செல்கிறார்கள். இந்த விழிப்பிற்கும் உறக்கத்திற்கும் இடைப்பட்ட காலம் முழுவதும் இவர்கள் வேலைகளைத் தொடர்ந்து செய்து கொண்டே இருக்கிறார்கள். ஓய்வெடுக்கும் நேரத்திலும் கூட இவர்களின் கைகள் ஏதாவது ஒரு வேலையை செய்து கொண்டே இருப்பதை நீங்கள் கண்டிருக்கலாம். அதை போல தர்மலிங்கத்தின் மனைவி ரெங்கம்மாள் காலை வேலையாக புட்டுக்குழலில் இருந்த புட்டை எடுத்து இரண்டு தட்டுகளில்

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
474
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

வைத்தாள். இன்னொரு தட்டில் சிறுபயிறையும் சீனியையும் கொண்டு வைத்தாள் ரெங்கம்மாள்.

**"யப்பா....! காப்பி குடிக்க வாங்க...." என்று கூட்டிக் கொண்டு போய் உட்கார வைத்தாள். "நீயும் சாப்பிடும்மா...." (முகிலை இராசபாண்டியன். ப. 48) என்று தாயார் சொன்னதற்கு அவிய இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்திடுவாங்க... அதுக்கப்புறமா நான் புட்டு தின்னுவேன்.... (முகிலை இராசபாண்டியன். ப. 48)** என்று சொன்ன அவள் கருப்பட்டி காப்பியை இரண்டு தம்ளர்களில் ஆற்றிக்கொண்டு வந்தாள். மதியம் ரெங்கம்மாள் தன் கணவருக்கு சாப்பிடுவதற்காக மீன்கறியை சமைத்து வைத்து விட்டு தன் கணவரையும் தன்னுடைய தம்பி முத்துப்பாண்டியையும் சாப்பிடுவதற்காக அழைத்துக்கொண்டு வீட்டுக்குள் போனாள். மீன்கறி வாசம் கவலையை எல்லாம் மறக்கச் செய்தது. **"சரி...சரி...நீங்க சாப்பிடுங்க..." (முகிலை இராசபாண்டியன். ப. 36)** என்ற ரெங்கம்மாள் இருவருக்கும் மீன் துண்டுகளை எடுத்து வைத்தாள். முத்துப்பாண்டியும் தர்மலிங்கம் சாப்பிட்டு விட்டு எழுந்திருந்தான். பெண் என்பவள் தன் குடும்பத்திற்கு தேவையான உணவு வகைகளை சமைத்து கொடுத்து குடும்பத்தில் உள்ளவர்களுக்கும் உள்ள தேவைகளைக் கவனிக்கின்றனர். இவை அனைத்தையும் பெண்களே செய்வதால் அவர்களே குடும்பப் பொறுப்பில் பெண்கள் முக்கியத்துவம் பெறுகின்றனர்.

**பெண்ணடிமைத்தனம்**

வரலாற்றின் பெரும் பகுதியில் பெண்கள் சமவுரிமை வாய்ப்புகள் பெறாமல் தாழ்வுநிலையில் வாழ்ந்ததையும் அவர்களுக்கு எதிரான பல்வேறு வன்முறைகளையும் சமய சமூக பொருளாதார அரசியல் கட்டமைப்பையும் குறிக்கிறது. சில சமூகங்களைத் தவிர பெரும்பான்மைச் சமூகங்கள் நெடுங்காலமாக ஆணாதிக்க சமூகங்களாகவே இருக்கின்றது. சுதந்திரங்கள் அற்றவர்களாகவும், ஆண் ஆதிக்கத்துக்கு அடிமைப்பட்டவர்களாகவும் இருக்கும் நிலையைப் பெண்ணடிமைத்தனம் ஆகும். ஒரு குறிப்பிட்ட வேலை என்றில்லாமல், வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் இழுத்து போட்டு செல்லத்தாய் செய்து கொண்டிருப்பார்கள். தங்கையா சைக்கிளை ஸ்டேண்ட் போட்டு விட்டுக் காலைக் கழுவுவதற்காக மாட்டுத்தொழுவத்தின் கதவைத் திறக்கப் போனார். சேல்லத்தாய்க்குத் **"திடுக்" என்றது. (முகிலை இராசபாண்டியன். ப. 69) "அந்தக் களத்துக்குள்ள தண்ணி இல்லையப்பா...! நீங்க அந்தமங்களா படியில நில்லுங்க..., நான் தண்ணி கொண்டு வாறேன்..." (முகிலை இராசபாண்டியன். ப. 69) என்று அவள் சொன்னதும் படியில் ஏறி நின்ற தங்கையாவின் காலில் ஊற்றினாள். காலுக்கு மேல் காலைத் தேய்த்து அழுக்கைக் கழுவிய அவர், "போதும்மா" (முகிலை இராசபாண்டியன். ப. 69) என்று சொல்லி விட்டு உள்ளே போனார். "அப்பா...! நான் ஒங்களுக்குச் சோறு போடுறேன்..." (முகிலை இராசபாண்டியன். ப. 69)** என்று வேகமாக உள்ளே போனாள். தங்கையா சாப்பிட்டு முடித்த அறிகுறி தெரிந்தது. சாப்பிட்டு முடித்ததும்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

உடனே தூங்கும் வழக்கம் அவருக்குக் ஒருநாளும் கிடையாது. வெற்றிலை போட்டபடி திண்ணையில் இருப்பார். அதன் பிறகு தான் தூங்கி விடுவார். செல்லத்தாய் வீட்டு வேலைகள் முடிந்தவுடன் தூங்கி விடுவாள். பெண்கள் ஆண்களுக்கு அடிமையாக இருந்தனர்.

**பெண்ணின் இரக்கம்**

மன்னிக்கும் பண்புடையோருக்கு இரக்கக்குணமும் இருக்கும். எல்லா உயிர்களிடமும் இரக்க குணமுடையவராக இருத்தல் நன்மை பயக்கும். **"தர்மலிங்கத்தைப் பார்த்ததும் ஓடி வந்தாள், ரெங்கம்மாள் அவளது கண்ணிலிருந்து கண்ணீர் பொங்கி வந்தது. போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகும் நிலை வந்துவிட்டதே என்று நினைத்து நினைத்துக் கவலைப்பட்டு தர்மலிங்கத்தின் இரக்கக்குணத்தை பல இடங்களில் வெளிப்படுத்துகிறார்". (முகிலை இராசபாண்டியன். ப: 35)**

**வரதட்சணை கொடுமை**

வரதட்சனை என்பது பெண்களைப் பெற்றவர்களுடைய மனதை சிதறடிக்கக் கூடியதாக உள்ளது. வரதட்சனை இந்திய நாட்டில் மட்டும் பரவலாகக் காணப்படும் ஒரு சமூகநோய் ஆகும். பெற்றேர்கள் தங்கள் பெண்களை நல்ல படித்த வேலையுள்ள வரன்களுக்குத் திருமணம் முடிக்க எண்ணி போது ஒரு போட்டி நிலை உருவாகியது. எனவே மாப்பிள்ளைக்குத் பெண்ணும் பொருளும் அளிக்க முன் வந்தனர். மெல்லமெல்ல ஆணாதிக்கம் அதிகரித்து சமுதாயத்தில் வரதட்சணை திருமணத்தில் வியாபாரம் விஷயமாகிறது. இந்திய தண்டனைச் சட்டம் 498 கட்டாய வரதட்சணை வாங்குவோர் தண்டிக்கப்பட வேண்டும்என்று கூறுகிறது. முத்துநாடார் கொஞ்சம் வருமாணத்தை வைத்து ரெங்கம்மளுக்கு ஏதோ கொஞ்சம் நகை போட்டுக் கல்யாணம் செய்து வைத்தார். இப்போது தங்கமாளுக்கு கொஞ்சம் நகை போட முடிந்தது. தங்கமாளுக்கு மாப்பிள்ளை வீடு பாண்டிக்காடு ஆதலால் அவங்க ஒன்றும் கேட்கவில்லை என்றாலும் நாம நம்ம மரியாதைக்கு ஏத்தாப் போல் போடணும் என்ற நினைப்புடன் நகைகள் எல்லாம் செய்துவிட்டார். பெற்றோர் பொருட்களைப் பரிசாகக் கொடுப்பது பற்றி தனது ஆலங்கால் நாவல் முகிலை இராசபாண்டியன் உணர்த்தியுள்ளார்.

**பெண் உரிமை மறுப்பு**

பெண்கள் தங்கள் வீடுகளில் முன் பகுதியில் இருப்பதற்கு உரிமை இல்லாமல் இருந்தது. என்னங்க... இன்னைக்கி வட்டலாத்து எங்கயும்போகல்லியா...? என்று கேட்டுக் கொண்டே மங்களாவுக்குள் பத்திரகாளியும் வந்தாலும் அவ்வளவாக உட்காரவில்லை. யாராவது அந்நிய மனிதர்கள் வருவார்கள்... போவார்கள் என்பதால் ஏதாவது பேசவேண்டும் என்றாலும் நின்று கொண்டே பேசிவிட்டுப் போய்விடுவார்கள்.

**திருமணம் உரிமை மறுப்பு**

தான் விரும்பும் மணமகனைத் தானே திருமணம் செய்து கொள்ள முடியாது. பெண்ணுக்கு வாழ்க்கையில் பெண் உரிமை மறுக்கப்பட்டது. தான் காதலிக்கும் ஆண்மகனை

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X


திருமணம் செய்யக் கூடிய உரிமை மறுக்கப்பட்டது. முத்துப்பாண்டியின் மீது காதல் கொண்ட செல்லத்தாய் காதலை விட உயர்வானதும் புனிதமானதும் இந்த உலகத்தில்வேறு எதுவும் இல்லை' என்று சொல்வாள். அந்த அளவிற்குக் காதலை மதித்தாள் அவள். முத்துப்பாண்டியின் மீது அளவு அதிமான காதல் வைத்தால். அவனை விட முடியாத அளவில் இருந்தாள். தன் தகப்பனார் தன்னுடைய காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து விட்டார். பத்திரகாளியும் செல்லத்தாய் ராத்திரி முழுவதும் தூங்கவில்லை. செல்லத்தாயின் கன்னம் வீங்கியிருந்தது. தலைவிரி கோலமாக இருந்தாள் அவள். மானம் போனதாக அடிக்கடி புலம்பிக் கொண்டிருந்தாள் அவள். ‘புள்ளய வளர்த்திருக்க லெச்சனமா' என்று ஏசுவதற்கு வந்த தங்கையா வீட்டின் நிலையைப் பார்த்ததும் அமைதியாக மங்களாவுக்குள் இருந்தார்.

**ஆணாதிக்க வர்க்கம்**

பெண்தன் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் ஆணைச் சார்ந்தே வாழ வேண்டியவர். ஆணே முன் நிறுத்தப்பட வேண்டியவன் என்னும் கருத்தியலுக்குள் ஆணாதிக்கவர்க்கம் பெண்ணைச் சிறைவைத்து வருகின்றன. எனவே சமுதாயத்தின் கடைசிநிலை உயிரியாகப் பெண் பின்னுக்குத் தள்ளப்படுகின்றாள். **தர்மலிங்கம் இடுப்பில் தொங்கிய குடுவையை அவிழ்த்த படியே “ரெங்கம்மா...!” (முகிலை இராசபாண்டியன். ப. 11) என்று அவரது மனைவியைக் கூப்பிட்டார். கருப்பட்டியை அடுக்கிக் கொண்டிருந்தரெங்கம்மாள், “இன்னா… வந்திட்டேன்...” (முகிலை இராசபாண்டியன். ப.11) என்று சொல்லிக் கொண்டே ஓடிவந்தாள். “ஏ.. ரெண்டு சொம்பு எடுத்துட்டுவா….” (முகிலை இராசபாண்டியன். ப. 11) என்று சொன்ன தர்மலிங்கம் குடுவையை அருகில் வைத்து விட்டுத் திண்ணையில் உட்கார்ந்தார். ரெங்கம்மாள் கொண்டு வந்த செம்புங்களில் இருந்த பதநீரை ஊற்றினார். இரண்டு செம்புகளும் நிறைந்ததும் ஒரு செம்பை உள்ளே கொண்டு போய் வைக்கச் சொன்னார். தர்மலிங்கத்திற்கு அடிமையாக ரெங்கம்மாள் இருந்தாள்.** இன்றைய சமுதாயம் ஆண்களின் அதிகாரத்துக்கு உட்பட்ட சமுதாயமாகும். இந்த ஆணாதிக்கச் சமுதாயம் பெண்ணை ஒரு மனித பிறவியாகப் பர்க்காமல் ஒரு போதைப்பொருளாகவும், விலங்காகவும் எண்ணி தங்களுக்கு அடிமையாக வைத்துக் கொண்டிருக்கிறது.

**பெண் கல்வி மறுப்பு**

பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது. ஆலங்கால் நாவலில் ஆண்மகனை மட்டுமே படிக்க வைத்தனர் பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது. சந்தையில் பார்த்த வியாபாரத்தால் தான் முத்துப்பாண்டியை மட்டும் படிக்க வைத்தார். அந்த வருமானத்தால் தான் ரெங்கம்மாளுக்கு ஏதோ நகைபோட்டுக் கல்யாணம் செய்து வைத்தார். தங்கம்மாளும் திருமணம் செய்து வைத்தார்.

**முடிவுரை**

மனிதனுடைய வாழ்வில் நடைபெறுகின்ற யதார்த்தங்களை வெளிக்கொண்டு வருவது

இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். மனித வாழ்வில் நெறிமுறையில் பெண்ணிப்பார்வையின் மூலமாக பெண்களையும் மனிதவாழ்க்கையும் சமுதாயத்தில் ஏற்படும் பிரச்சனைகளையும் வெளிக்கொண்டு வருவது. வாழ்க்கையில் நம்பிக்கையுடன் வாழ உதவுகிறது. இன்றைய காலகட்டத்திலும் பெண்ணடிமை பெண்களுக்கெதிரான சூழல், ஆணாதிக்கம் இன்றைய காலங்களிலும் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. ஏழை மக்களின் அடிமைத்தனத்தை உடைக்க வேண்டும் என்பதை இக்கட்டுரை உணர்த்துகிறது.

**குறிப்புகள்**

[1] அரங்கநாதன், தி. தமிழ் இலக்கிய வரலாறு ஒரு புதுப்பார்வை. தேவன் பதிப்பகம், 43 திருநகர், திருவானைக்கோவில், திருச்சி-620005, 1999.

[2] இராசபாண்டியன், முகிலை. *ஆலங்கால்.* கோவன் பதிப்பகம், 72, எம்.ஜி.ஆர். சாலை, நங்கை நல்லூர், சென்னை-600061, 2009.

[3] கௌரி அனுராதா, க. *ரமணன் படைப்புகளில் மகளிர் நிலை.* கோடம்பாக்கம், சென்னை-600024, 2012.

[4] சுப்பையா, அரங்க. *இலக்கியத்திறனாய்வு இசங்கள், கொள்கைகள்.* பாவை பப்ளிகேஷன்ஸ், இராயப்பேட்டை, சென்னை-600014, 2006.

[5] மல்லிகா, அரங்க, முனைவர். *தமிழ் இலக்கியமும் பெண்ணியமும்.* பாவை பிரிண்டர்ஸ், (பி)லிட்., இராயப்பேட்டை, சென்னை-600014, 2015.

[6] ரெங்கம்மாள், இரா, முனைவர். வாசுகி, சு. முனைவர். *பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப்பயன்பாடும்.* பாவை பிரிண்டர்ஸ், இராயப்பேட்டை, சென்னை-600014, 2016.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.